www.tamilarangam.net

# நட்பு முரசு

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்

வைகாசி 1987 முரசு: 5 ஒலி:7

RECEIVED 1 7 JUN 1987
19047



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் விமர்சனம்: இனி வரும் காலம்

ஆக்கிரமிக்கப்பட்ட இனங்கள் தங்கள் விடுதலைக்காகப் போராடும் பொழுது அங்கிருந்து புதிய, புரட்சிகர இலக்கியங்கள் உருவாகுவது இயற்கையானதும், உந்துசக்தியானதுமாகும். மூன்றாவது தலைமுறையை தாங்கி நிற்கும் எமது தேசத்தின் விடுதலைப் போராட்டம் மிகவும் உக்கிர நிலையை அடைந்த பொழுது ஏராளமான இலக்கியங்கள் தோற்றங்களாகின.

தேசவிடுதலைப் போராட்டத்தை மையமாகக் கொண்ட எமது போராட்டத்தில் பலதரப்பட்ட வர்க்கங்களின் பங்களிப்பானது முக்கியப்படுத்தப்பட்டது. அதேபோல் இலக்கியத் தோற்றங்களும் பலதரப்பட்ட கோணங்களில் வெளி வந்தமையும், வெளியாகிக்கொண்டிருப்பதையும் நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. முக்கியமாக கவிதைகள், ஆய்வுகள் போன்றவை ஏராளமாக இயக்கங்களாலும், குழுக்களாலும், தனிநபர்களாலும் வெளியிடப்பட்டமை நல்லதொரு இலக்கிய முயற்சியாகும்.

இந்த வகையில் அண்மைக்காலங்களில் வெளிவந்த கவிதைத் தொகுப்புகளில் ஒன்றுதான் நா.சபேசனின் "இனி வரும் காலம்". பொதிகை வெளியீடான இக்கவிதைத் தொகுப்பு 67 பக்கங்களைக் கொண்டதும் 12 கவிதைகளைக் கொண்டதுமாகும்.

அநேகமான இலக்கியங்கள் தாக்கங்களின் வெளியீடாகும், இன்னொருமாதிரிக் கூறினால் அனுபவங்களின் வெளிப்பாடாகும். இதை "அடக்கு முறையையும், அதற்கெதிரான போராட்டத்தையும் பார்வையாளர் நிலையிலிருந்து கவிஞர்கள் சித்தரித்த நிலை போய் இன்று போராளிகள் சிலர் கவிஞர்களாக தங்களது வாழ்ந்து பெற்ற அனுபவத்தை கவிதைகளாக பதிவு செய்கிறார்கள்". என்பதுடன் "என்னுடைய கவிதைகள் உங்களிடம் ஏதாவது பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தால் அதற்கு நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் யுத்த களமே காரணமாகும்" என்னும் கவிஞர் சபேசனின் முன்னுரை வாக்குமூலமே சாட்சியங்களாகும்.

வழமைபோல் ஈழத்தையே தளமாகக் கொண்ட சபேசனின் கவிதைப்பிரசவங்கள் இடம் பெற்றாலும் விசாலமான வித்தியாசமான அணுகுமுறைகள் கையாளப்பட்டிருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. பாவட்டை செடிகளையும், கற்றாளைப்பற்றைகளையும், கிடுகு வேலிகளையும், பூவரச மரங்களையும், செம்பாட்டு மண்ணையும், கொம்புளப்பிப் பூக்களையும் மறந்து ஐரோப்பிய மண்ணில் அகதிகளாக முகமிழந்து வாழும் எமக்கு சபேசனின் கவிதைகளைக் கண்ணுறும் பொழுது எங்கள் பாச பூமியின் ஏக்கம் தீயாகப் பற்றி எரிகிறது.

ஆக்கிரமிப்புப்படைகளால் காட்டுமிராண்டித்தனமாக 81 ம் ஆண்டு நாசமாக்கப்பட்ட யாழ் நூல் நிலைய சம்பவத்தை நினைந்து பாடும் கவிஞர் நூல்நிலைய அழிவானது நமது நாடு அழிக்கப்பட்டதற்கு சமம் என்பதை குறிப்பிட முயலும்பொழுது ஈழநாடு பத்திரிகை நிலையம் எரிக்கப்பட்டதை குறிப்பிட்டு இரட்டை அர்த்தத்தில்,

"பொதுசன நூலகம் அழிந்து போனது
'ஈழநாடும்' சாம்பலானது"

எனக்குறிப்பிடும் பொழுது எங்கள் அனைவருக்கும் இருக்கும் ஆழ்ந்த துயரத்தின் பொது வெளிப்பாடாக அமைகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது பூமி அன்றிருந்த சுதந்திர நிலையைக் குறிப்பிடவரும் சபேசன் மன்வாசனையுடன் இப்படிக் கூறுகிறார்,

"மஞ்சளாய் பழுத்த
இலைகள் சொரியும் பூவரச வேலிகளும்
வயல் வெளியெல்லாம் ஓரங்காட்டும்
பனைகளும் நிறைகிற
எனதூரில்
காகங்கள் கூட சுதந்திரமாய்த் திரிந்த
காலமொன்றுண்டு"

என்று கூறி இன்னும் நயமாக ஆழ்ந்து மேலும் ஏங்கும் கவிஞர்,

"செம்பாட்டு மண்ணிலும்
மிளகாயும் வெங்காயமும்
நிறைய, நிறைய விளைந்திருக்கும்
சாமம் வரையும் திருவிழா நடக்கும்
கல கலத்தபடி நடந்து செல்வர்
எமது பெண்கள்"

என நாம் இன்று இழந்துவிட்ட கலகலப்பையும், கூட்டு வாழ்க்கையையும் குறிப்பிடுகிறார்.

ஈழ தேசத்தில் பகைவர்களின் படையெடுப்பை ஆட்சேபிக்கும் சபேசன்,

"அந்நிய மணம்
வீச ஆரம்பித்த தெமதூரில்
மக்களுக்கே தெரியாத கால்களெமது
ஒழுங்கைகளை ஆக்கிரமித்தது"

என யுத்த காடாகிப்போய்விட்ட எமது தேசத்தின் ஒவ்வொரு ஒழுங்கைகளையும் அந்நியன் சப்பாத்துக்கள் மிதித்து நாசமாக்கிவிட்டதன் அநியாயத்தை கூறுகிறார் கவிஞர்.

"சுவாமி காவிய பக்தர்கள் மீது
தடி க்கை வால் பட்டது"

எமது மக்களின் இன்றைய பரிதாப நிலையை இரட்டை அர்த்தத்தில் இரண்டு வரிகளுக்குள் அடக்கி எவ்வளவு அழகாக வேதனையோடு படைக்கிறார் கவிஞர். திருக்கை வால் அடி பட்டது எமக்கு இன்று எதிரிகளிடமிருந்து மட்டுமா...?

இன்றைய ஈழத்தில்,

"திருவிழா போய் பூசை மட்டுமே
நடக்கத்தொடங்கியது,
அதுவும் போயிற்றப்போ"

எனச் சலிப்போடு கூறுகிறார் சபேசன் ஈழப் போராட்டத்தில் நியாயபூர்வமாக இன்று ஈழப்பெண்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் பங்கை மகிழ்வுடன் ஏற்கிறார். அதைத் தனது கவிதையில் குறிப்பிடுகையில்,

"என்னரும் மக்களை, தங்களைப் பற்றியே
தெரியாதிருக்கும் எங்கள் பெண்களை
கட்டியெழுப்பும் உன்னைக்கண்டேன்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனது சிநேகிதிக்கு என எழுதிய கவிதையில் ஒரு பகுதியை பார்த்தோம். அத்துடன் யாழ் பெண்களை அறைகூவல் மூலம் அழைக்கிறார் கவிஞர்,

"தீ மூட்டுங்கள்
வேலிகளை அத்தீயில் எரியுங்கள்,
பிறகு
நாங்கள் இருக்கும் வெளிக்கு
வாருங்கள்!"

எனக்கூறும் கவிஞர் வேலிதாண்டா பெண்களையே அப்படிக் குறிப்பிடுகிறார். இதை விரிவாக காதல் பற்றிய தனது கவிதைகளில் எழுதுகிறார் சபேசன்.

உலகமே அதிர்ந்த 83 சிறைப்படுகொலையை நினைந்து கண்ணீர் விடும் சபேசன்,

"முகமறிந்த சிலரதும்
முகமறியாப் பலரதும்மாய்
ஐம்பத்தி நால்வரின்
நினைவும் முகிழ்ந்தது...."

என ஒரு போராளியாகிய நமது கவிஞர் தெரிந்த தெரியாத அனைத்துப் போராளிகளையும் நினைந்து உருகுகிறார்,

"ஒளி மிகுந்த வாழ்க்கையை
எமது மண்ணில் நிறுவ
துயர் மிகுந்த நாட்களை
உறுதியோடு கடந்தீர்"

அநியாயமாக அழிக்கப்பட்ட போராளிகளின் மரணத்தைக் கண்டு தாங்காது சபதமிடும் கவிஞர் சபேசன்,

"துயரினை அறிவோம்
அழுகையை அறிவோம்
அதனை மீறி
எங்கள் வலிமையும் அறிவோம்
அழுகுரல் இனி அடங்கும்
எங்கள் கரங்கள் பேசத்தொடங்கும்"

எனக் கூறியதன் மூலம் 83 யூலைக்குப்பின் திரள்திரளாக போராளிகளாகப் புறப்பட்ட ஈழத்து இளம் குருத்துக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கிறார்.

ஈழ தேசத்தின் விடுதலையில் நம்பிக்கை கொண்டு எத்தனையோ இழப்புகளின் மத்தியில் விடுதலைக்காகப் போராடப்புறப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் போராளிகளை புதிய பாசிசவாதிகளான புலிகள் கொன்றுகுவித்து தீ மூட்டினர். ஈழ தேசத்தின் உண்மை விடுதலை விரும்பிகள் யாராலும் ஏற்றுக்கொள்ள, நியாயப்படுத்த முடியாத இப்பாசிச செயலை இதயக்குமுறலுடன் அணுகி மூன்றாவது மனிதனாக நின்று நோக்காது தன்னையே ஆட்படுத்தி உணரும் கவிஞரின் தேச பக்தியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

கொல்லப்பட்ட போராளிகளின் அன்னையர் மனநிலையை இச்செயல் எப்படிப் பாதித்திருக்கும் என்பதை உணர்ந்து உருகி கவிஞர்,

"உன்னுடைய பாசத்திற்கும்
அரவணைப்பிற்கும்
கனவுகளுக்குமுரிய மகன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு எதிரியைப்போல்
தெருவில் சுட்டெரிக்கப்பட்டான்
என்பதை
நீ நம்பப்போவதில்லை"

எனக் கூறிக்கதறுகிறார்,

"என்றபோதும் அம்மா....
எதிரிகளோடு போர்புரியப்போன
நெஞ்சுரம் மிக்க உன் மகன்
காற்று வீசுகிற தெருக்களில்
எலும்பும் மிஞ்சாமல் சாம்பலாகிவிட்டான்"

என்று அந்த உண்மையை தாய்மார் நம்பியே தீரவேண்டிய ஈழப்போராட்டத்தின் தலைவிதியை நொந்து கூறுகிறார். தென்னாபிரிக்க விடுதலைப்போராளி கவிஞர் பொபிஸான்ட்ஸ் நினைவா கவிபாடும் சபேசன்,

"பொபிஸான்ட்ஸ்
உந்தன் நினைவில்
வாழ்வை மீட்பதன் வலிமை உணர்கிறேன்"

என்றும்,

"எங்களால் இயன்ற வழிகளில்
நாங்கள் மானிடர் என்பதை
உரத்துக்கத்துவோம்
நியூயோர்க் நகரத்து பூங்காவில்
காதலி மார்பில் துவளும் மனிதனும்
ஹேக் நகர நீதிவான்களும்
இன்னும் எஞ்சிய எல்லா மனிதரும்
எங்கள் உறுதி உணர்வர்"

என உலக மக்களுக்கு பொபிஸான்ட்ஸ் மூலமாக தனது உறுதியான செய்தியை வெளிப்படுத்கிறார் கவிஞர் சபேசன்.

சிங்கள வெறியர்களின் அராஜகத்திற்கு எந்தவகையிலும் சோடைபோகாத, ஈப்போராட்டத்தின் சரியான குணாம்சத்தை புரிந்து கொள்ளாத தமிழ்தீராக வெறியர்களின் சி செயல்கள் எமது போராட்டத்தின் பரிமாணத்தை பல வழிகளில் திசை திருப்பியது. அநுரதபுர படுகொலை இதற்கு எடுத்துக்காட்டாகும். இதையும் நினைவு கூற எமது கவிஞர் தவறவில்லை. த்துயர் மிகு சம்பவத்தை குறிப்பிடும்பொழுது,

"கொழும்புத் தெருக்களில்
வெட்டியும் எரித்தும்
கொடுஞ் செயல் புரிந்த
உம்மவர் போலவே
அநுரதபுரத்து வீதிகளெங்கும்
எம்மவர் தீர்த்த வேட்டுக்கள் கேட்டு
பெருந்துயர் கொண்டோம்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என சிங்கள மக்களுக்கு விடும் தூதில் குறிப்பிடும் கவிஞர்,

"உங்களது பச்சையரிசிச் சோற்றை,
ஈரப்பலாக்கறியை,
அன்பான உபசரிப்பை,
அதனிலும் மேலான நட்பை
அனுபவிக்க நான் ஆசைப்படுகிறேன்"

என்ற மனிதநேய உணர்வை துணிவுடன் வெளிப்படுத்துகிறார். ஈழப்போராட்ட இயக்கங்கள் பலவற்றுக்குள் நடந்த ஜனநாயக மீறல்கள், அராஜகங்கள் தோழமைத்துவத்தை மறந்து, எதிரிகள் - யார் என்பதை சரியாக இனம் காணமுடியாமல் நடந்த துன்ப சம்பவங்களை ஆதங்கத்துடன், ஆச்சரியத்துடன்,

"அதன் பிறகுதான்
நிறைய விசயங்கள்
முகாமினுள் வந்தன
கொலைகளின் விதங்கள்,
வதைகளின் முறைகள்,
பேயறைந்த முகத்தோடு
குசு குசுத்து
தோழர்கள் சொல்வர்"

எனக்குறிப்பிடும் சபேசன் ஈழப்போராட்டத்தின் நம்பிக்கையை உறுதியுடன் பிரதிபலிக்கிறார்,

"மக்களின் உரிமைகளை நசுக்கும்
பாசிச வாதிகளின்
இன்றைய நடைமுறையினுள்ளும்
புரட்சியின் மீது
நாங்கள் கொண்டுள்ள
உறுதியான நம்பிக்கையை
உனக்கு நான் தெரியப்படுத்துகிறேன்"

இருபத்தியிரண்டு வயதுடைய சபேசன் எனப்படும் சிறீசபேசன் எம்மிடையே எழுந்துள்ள புதிய பாசிச அராஜகவாதிகளை இனம்கண்ட ஒரு ஈழப்போராளியாகும். அவர் இறுதியாக,

"போராட்டத்தை விட்டு ஒதுங்கிவிடாதே
என்ற என்னுடைய கோரிக்கையை
நீண்ட விளக்கங்களுடன்
நான் உனக்கு சொல்லுகிறேன்"

என்று புறப்பட்டுள்ளார் சபேசன். விதையை விதைத்தவன் அறுவடை செய்தே ஆகவேண்டும் என்பதே நியதி. சபேசனின் முயற்சி வெற்றிபெறவேண்டும் என்பதே எமது ஆசையும்கூட.

மொத்தத்தில் இத்தொகுதியில் நல்லனவற்றையே நாம் காண்கிறோம். நல்லதொரு முயற்சியை வரவேற்போம்.

— ஜெகன் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்